டெரிக் பிரின்ஸ்

கன்மலையின் மேல் கட்டப்படுதல்

[வெற்றி, பாதுகாப்பு மற்றும் தேவனை பிரியப்படுத்தும் வாழ்விற்கு முக்கியமான அடிப்படை]

Derek Prince Ministries - India

"KANMALAIYIN MEL KATTAPADUTHAL"

Printed by Derek Prince Ministries

TAM/5000/0823/LOP

ISBN 978-93-92947-15-5

"FOUNDED ON THE ROCK" (Tamil)

"KANMALAIYIN MEL KATTAPADUTHAL"

Published by permission in the Tamil language.

For orders & other enquiries please contact :

DERECK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in

Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

Derek Prince
MINISTRIES INDIA

கன்மலையின் மேல் கட்டப்படுதல்

வேதம் நல்ல போதனையின் மாதிரியாக இருக்கின்றது, போதனையின் கோட்பாடுகளை பின்பற்றுகிறதாயும் இருக்கிறது. அதில் ஒன்று, அறிந்தவைகளில் துவங்கி, மக்களை அறியாதவைகளுக்குள்ளே வழிநடத்துகின்றது. இதைச் செய்வதற்காக, மிக எளிதான, சாதாரணமான, அன்றாட அனுபவங்களையும், செயல்களையும் பயன்படுத்தி, அவைகளுக்கு வேதம் ஒரு ஆவிக்குரிய பயன்பாட்டை அளிக்கின்றது.

பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன. வேதம் விதை விதைக்கின்ற விவசாயியை குறித்துச் சொல்லுகிறது, வலையில் மீன் பிடிக்கிற மீனவனைக் குறித்தும், சர்வாயுதவர்க்கத்தை தரித்துக்கொள்ளும் போர்ச்சேவகனைக் குறித்தும் பேசுகின்றது. பிற்பாடு, முழுமையும் வித்தியாசமான சந்தர்ப்பத்தில் திருமணத்திற்கு தன்னை ஆயத்தம் செய்யும் மணவாட்டியை குறித்து பேசுகிறது.

இவை அனைத்தும் அந்த கோட்பாடின் ஒரு சில உதாரணங்கள் மட்டுமே.

கிறிஸ்தவ வாழ்க்கை – ஒரு கட்டிடம்

நான் கவனம் செலுத்த விரும்பும், சாதாரண செயல்பாடு, கட்டிடம் கட்டும் வேலை. கிறிஸ்தவ வாழ்க்கையின் இந்த உதாரணம், வேதத்தில் மற்ற எந்த உதாரணத்திற்கும் சமமாக பயன்படுத்தபட்டிருக்கிறது.

ஆகையால் முதலில் நாம் யூதாவின் புஸ்தகம், 20 மற்றும் 21ஆம் வசனங்களுக்கு திருப்பிக்கொள்வோம், விசுவாசிகளாகிய நமக்கு இது ஒரு அறிவுரையின் வார்த்தையாக அமைந்துள்ளது.

> **நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.**
>
> **யூதா 20-21**

ஆகையால், நம்முடைய மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் நம்மை நாம் கட்டி எழுப்ப வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. கட்டிடத்தின் உவமானம் இப்படியாக பயன்படுத்தப்படுகிறது. நாமே, நம்மை கட்டி எழுப்புவதற்கு பொறுப்புள்ளவர்களாய் இருக்கிறோம்.

எபே 2:21–22இல், தேவனுக்குள் ஒரு பரிசுத்த ஆலயத்தைக் குறித்துப் பேசுகிறது:

> **அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த**

ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்.

எபே 2:21-22

தேவனுடைய பரிசுத்த ஆவியானவருக்குள் முழு கிறிஸ்தவ சமுதாயமும், தேவன் வாசம் செய்யும் ஸ்தலமாக கட்டப்பட வேண்டியதைக் குறித்து அது பேசுகிறது.

அதற்குப் பின், இயேசு ஜீவனுள்ள கல், என்று கூறும் பேதுரு, இப்படியாக சொல்லுகிறார்:

மனுஷரால் தள்ளப்பட்டதாயினும் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டதும் ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் [இயேசு] சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

1 பேதுரு 2:4-5

ஆகையால் அங்கே நாம் ஒவ்வொருவரும், தேவன் வாசம் செய்யப்போகும் ஆலயத்தில், இசைந்து கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஜீவனுள்ள கற்களுக்கு ஒப்புமையாக்கப்பட்டுள்ளோம்.

இறுதியாக அப்போஸ்தலர் 20லிருந்து ஒரு உதாரணம். எபேசிய மூப்பர்களுக்குப் பவுல் விடை கூறுகிறார். இவர்களைப் பவுல் விசேஷித்த அன்பினால் நேசித்தார். ஏனென்றால், இவருடைய ஊழியத்தின் மிக அதிகமான பலன்களை எபேசுவில் தான் கண்டார்.

அப்போஸ்தலர் 20இல் அவர்களுக்கு விடை கூறி, இந்த வாழ்க்கையில் மீண்டும் அவரைக் காண மாட்டார்கள் என்று அவர்களுக்கு சொல்லுகிறார். எல்லோருக்கும் அது ஒரு உணர்ச்சிப்பூர்வமான சூழ்நிலை. இறுதியாக பவுல் அவர்களுக்கு கூற விரும்பினது இது தான்.

> **“இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்.”**
>
> **அப்.20:32**

ஆகையால் இங்கே பவுல் சொல்லுகிறார், நம்மைப் பிரதானமாக கட்டி எழுப்புவது, தேவனுடைய கிருபையுள்ள வார்த்தையாகிய வேத வசனம் தான். நம்மைக் கட்டி எழுப்பி, கிறிஸ்து இயேசுவில் வைக்கும் விசுவாசத்தினால் அவருக்கென்று பிரித்தெடுக்கப் பட்டவர்களுக்குள் நமக்கு ஒரு சுதந்தரத்தை கொடுக்கவும் வல்லமையுள்ளது என்று அவர் கூறுகிறார்.

அஸ்திபாரம் இயேசுவே

நான் கட்டடம் கட்டுகிறவர் அல்ல. ஆனால் எனக்கு ஒன்று தெரியும். செங்கலினாலோ, கல்லினாலோ, சிமெண்ட் அல்லது மரத்தினாலோ கட்டப்பட்ட எந்த நிரந்திர கட்டிடத்திலும் மிக முக்கியமானது அஸ்திபாரம் தான். வேதமும் குறிப்பாக இதைக் குறித்துப் பேசுகிறது, இது நம் எல்லோருக்கும் மிக முக்கியமான ஒரு

காரியம். சரியான அஸ்திபாரம் போடுவது மிக முக்கியமானது. ஏனென்றால் அஸ்திபாரம் தான் மேலே எவ்வளவு பெரிய கட்டிடம் கட்டப்பட முடியும் என்பதைத் தீர்மானிக்கின்றது.

அஸ்திபாரம் கட்டிடத்தின் அளவுகளுக்கு எல்லையைத் தீர்மானிக்கின்றது – அளவு மற்றும் எடையில். இது கிறிஸ்தவ வாழ்க்கையிலும் உண்மை. உங்கள் அஸ்திபாரம் அனுமதிக்கின்ற அளவிற்கு அதிகமாக நீங்கள் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்கையைக் கட்டமுடியாது. இதுதான் முக்கியமான கேள்வி, உங்கள் அஸ்திபாரம் என்ன? சரியான அஸ்திபாரத்தை போட்டிருக்கிறீர்களா?

சரியான, பொதுவான, ஒரே அஸ்திபாரம் உண்டு, அது எல்லாவற்றுக்கும் போதுமானது, அது ஒரு நபர். அந்த நபர் இயேசு கிறிஸ்து. 1 கொரிந்தியர் 3இல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிற பவுல் இரண்டு உவமானங்களைப் பயன்படுத்துகிறார். அவர் விவசாய உவமானத்தை பயன்படுத்திவிட்டு, கட்டிடத்தின் உவமானத்துக்கு கடந்துபோகிறார். 9–ம் வசனத்தில் கூறுகிறார்:

> **நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்.... [நாங்கள் தேவனோடு வேலை செய்கிறோம்]..... நீங்கள் தேவனுடைய பண்ணையும்.....[அது தான் விவசாயத்தின் உவமானம்]..... தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள் [அது தான் கட்டிடத்தின் உவமானம். அந்த கட்டிடத்தின் உவமானத்தையே தொடருகிறார்]. எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல [கிரேக்கத்தில் கட்டிட சிற்பி என்று அர்த்தமுள்ள வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது] ..... அஸ்திபாரம் போட்டேன், வேறொருவன் அதின்மேல்**

கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.

1 கொரிந்தியர் 3:9-11

கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஒரே அஸ்திபாரம் தான் உண்டு, அது இயேசுவே என்றும் பவுல் கூறுகிறார். அந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டப்படாத எதுவும், காலம் மற்றும் போராட்டத்தின் சோதனையில் நிலைத்து நிற்காது. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கை எதின் மீது கட்டப்பட்டிருகிறது என்று மதிப்பீடு செய்வது மிகமிக முக்கியமானது. நாம் உண்மையிலேயே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டிருக்கிறோமா? இயேசுவோடு தனிப்பட்ட உறவும், அவரை அறியும் அறிவும் நமக்கு இருக்கின்றதா?

இயேசுகிறிஸ்துவில் இந்த அஸ்திபாரம்போடும் காரியம் மிகவும் முக்கியமானது. ஆகையால் கொஞ்சம் நேரமெடுத்து, இந்த அஸ்திபாரத்தை நாம் எப்படி பெற்றுக்கொள்ளலாம் என்பதைக் குறித்து நான் விவரிக்க விரும்புகிறேன்; அதாவது, இயேசு என்னும் அஸ்திபாரம் நம் வாழ்விலே பெற்றுக்கொள்வது எப்படி. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் சொந்த வாழ்க்கையை ஆராயும் படியாக அழைக்கிறேன், உங்கள் ஆவிக்குரியநிலைமைமற்றும்உங்கள்ஆவிக்குரிய அனுபவம், இவைகளைச் சோதித்து நீங்கள் அஸ்திபாரத்தோடுசரியானஉறவில்இருக்கிறீர்களா என்று ஆராய்ந்து பாருங்கள்.

சில அடிப்படை போதனைகளுக்காக மத்தேயு 16ல் ஆரம்பம் செய்யலாம். இயேசு தம்முடைய சீஷர்களோடு பேசிக்கொண்டிருக்கிறார், அங்கே சொல்லுகிறது:

> **பின்பு இயேசு பிலிப்பு செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவன்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். [பின்பு அவர் அதைத் தனி நபருக்குரியதாக மாற்றுகிறார்.] அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து [மேசியா] என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்க்கொள்வதில்லை.**
>
> **மத்தேயு 16:13-18**

அது பேதுருவின் வாழ்விலும், கிறிஸ்தவத்தின் முழு சரித்திரத்திலும் ஒரு தீர்க்கமான நொடியாக அமைந்தது. கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் அஸ்திபாரம் போடுவது எப்படி என்பதைக் காண்பிக்க, இயேசு பேதுருவோடு ஏற்பட்ட இந்தச் சந்திப்பைப் பயன்படுத்துகிறார்.

பேதுரு தான் சபையின் அஸ்திபாரம் என்று நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படியானால் சபை இன்னும் ஒரு அசைந்தாடுகிற கட்டிடமாய்த் தான் இருக்கும் என்று நான் சொல்லுவேன், ஏனென்றால், அதற்குப்பின் இயேசு "எனக்கு பின்னாகப் போ சாத்தானே" (மத்தேயு 16:23) என்று அவனைக் கடிந்துக் கொள்ளுகிறார். இன்னும் சில காலத்துக்குப் பின், ஆண்டவரை மூன்று முறை மறுதலித்தான். (யோவான் 18:15-17, 25-27). உயிர்தெழுதலுக்குப் பின்னும், சக யூதர்களுக்குப் பயந்து, சுவிசேஷத்தின் சத்தியத்தை உண்மையாய் பேசாததினால், பவுல் அவரைக் கடிந்துகொள்ள வேண்டியதாய் இருந்தது. (கலாத்தியர் 2:11-16ஐ பார்க்கவும்.) ஆகையால் சபை பேதுருவின் மேல் கட்டப்படாமல் இருப்பதற்காக நான் நன்றி உள்ளவனாய் இருக்கிறேன்.

கிரேக்க ஏற்பாட்டிலிருந்து தெளிவாக வெளிவருகிறது இதுதான், "நீ பேதுருவாய் இருக்கிறாய்" [பெட்ரோஸ்], "இந்தக் கல்லின் மேல்," [பெட்ரா] என் சபையைக் கட்டுவேன்" (மத்தேயு 16:18). கிரேக்கத்தில் பெட்ரோஸ் என்றால் ஒரு சிறிய கல் அல்லது சிறிய பாறை. சாதாரணமாக மற்றொருவரை அடிப்பதற்கு பயன்படுத்தும் கல்லாகும்.

அதற்கு எதிர்மறையாக பெட்ரா என்பது கீழே இருக்கும் பாறையான அடித்தளத்திலிருந்து, வெளியே காணப்படும் மிகப் பெரிய கரடு முரடான பாறையாகும். ஒரு பெரிய செங்குத்தான பாறை அல்லது அதற்கு ஒப்பான ஒன்றுக்குத் தான் அந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் முக்கியமாக அது கீழே இருக்கும்

பாறையான அடித்தளத்தின் பகுதியாக இருக்க வேண்டும். பாறையான அடித்தளம் என்பது என்ன? அதைத் தான் பேதுரு கடந்து வந்தார், பரிசுத்த ஆவியானவரின் மூலமாய் இயேசு யாராயிருக்கிறார் என்கிற வெளிப்பாடு. பிதாவாகிய தேவன் பரிசுத்த ஆவியானவரின் மூலமாய் உங்களுக்கு வெளிப்படுத்தினாலொழிய, இயேசு கிறிஸ்து உண்மையிலே யாராய் இருக்கிறார் என்பதை ஒருவரும் அறிய முடியாது.

ஆகையால் இது தான் பெட்ரா, நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தைக் கட்டுவதற்கான அடித்தளம். இயேசு கிறிஸ்துவோடு ஒரு தனிப்பட்ட சந்திப்பும், இயேசு நித்தியமான, படைக்கப்படாத தேவனுடைய குமாரன், தச்சனுடைய குமாரனோ, சரித்திர புருஷனோ அல்ல என்கிற வெளிப்பாடுமே. அந்த கன்மலையின் மேல் நாம் கட்ட வேண்டுமானால், இந்த நிலைக்கு தான் நாம் வர வேண்டும். பேதுரு கடந்து வந்த அனுபவமே நமது அனுபவமாக மாற வேண்டும்.

நான் ஜனங்களுக்கு அநேக முறை கூறியுள்ளேன், நீங்கள் ஒரு சபையில் சேர்ந்து, சடங்காச்சாரமான நிகழ்ச்சிகளில் ஈடுப்பட்டு,ஜெபம் செய்து இன்னும் மாற்றப்படாமலேயே இருக்கலாம். ஆனால் உண்மையாய் நீங்கள் இயேசுவை சந்தித்தால், நீங்கள் மாற்றப்படுவீர்கள். இயேசுவை சந்திக்கிற யாருமே மாற்றப்படாமல் இருக்க முடியாது. ஆகையால் நாம் ஒவ்வொருவரும், "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு, எனக்கு இந்த வாழ்க்கையை மாற்றும் தனிப்பட்ட சந்திப்பு ஏற்பட்டுள்ளதா?" என்று கேட்க வேண்டும்.

இயேசுவை எதிர்கொள்ளுதல்

இந்த சந்திப்பில் பேதுரு கடந்து வந்த நான்கு கட்டங்களை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதலாவது சந்தித்தல். இயேசுவும் பேதுருவும் முகமுகமாய் சந்தித்தார்கள். மத்தியஸ்தனோ, ஆசாரியனோ, ஒருவரும் அவர்களுக்கு இடையில் வரவில்லை. இயேசுவோடு நேரடியான, தனிப்பட்ட சந்திப்பாய் இருந்தது. அதற்கு தான் நாமும் வர வெண்டும். இன்னோரிடத்தில் இயேசு, "நானே வாசல். என் மூலமாய் உள்ளே பிரவேசிக்கிறவன் இரட்சிக்கப்படுவான்." என்று சொன்னார். தேவனுடைய இராஜ்யத்துக்குள் ஒரே வழி தான் இருக்கிறது, அது வாசலின் வழியாய் தான். அந்த வாசல் ஒரு சபையல்ல, ஒரு உபதேசமுமல்ல, அது இயேசு தான். "நானே வாசல்."

இரண்டாவதாக, அந்த சிந்தித்தலை தொடர்ந்து, வெளிப்பாடு ஏற்பட்டது. பிதாவாகிய தேவன், பரிசுத்த ஆவியானவரின் மூலமாய் தந்தருளிய ஒரு வெளிப்பாடு. இயேசு, "மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை" என்றார் (மத்தேயு 16:17). இதை உங்கள் சொந்த அறிவாற்றலினாலே நீங்கள் பெற்றுக்கொள்ள முடியாது, வெளிப்பாடு உண்டாக வேண்டும். இதுவும் மிக அவசியமாக இருக்கிறது. ஒரு தனிப்பட்ட வெளிப்பாடில்லாமல், ஒருவருமே இயேசுவை உண்மையாய், அவர் தேவனிடத்திலிருந்து பெற்றிருக்கும் நித்திய குமாரன் என்னும் நிலையில் அறிய முடியாது. நீங்கள் இறையியல் படிக்கலாம், வேதாகம கல்லூரிக்கு செல்லலாம், ஒரு ஊழியக்காரனாய் மாறலாம். ஆனால் இயேசுவைக் குறித்த இந்த

தனிப்பட்ட வெளிப்பாடில்லாமல் நீங்கள் அவரை அறிய முடியாது. இந்த வெளிப்பாடு பிதாவாகிய தேவனிடத்திலிருந்து, பரிசுத்த ஆவியானவரின் மூலமாய் வருகிறது.

இயேசுவை தனிப்பட்ட முறையில் சந்தித்திருக்கிறீர்களா? நான் சந்தித்திருக்கிறேன். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது, கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்பாக, நடுஇரவிலே, இராணுவம் தங்கும் அறையிலே, நான் இயேசுவை சந்தித்தேன். எனக்கு எந்த இறையியல் ஞானமும் இல்லை, சுவிசேஷத்திற்குறிய பேச்சும் எனக்கு இல்லை, நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என்று சொல்லக் கூட அறியாமல் இருந்தேன். அதற்கு பின்பு தான் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டேன். ஆனால் அன்று நான் பயங்கரமாகவும், நிரந்தரமாகவும் மாற்றப்பட்டேன். நான் பழுதற்றவனாகவில்லை. உண்மையைச் சொன்னால், இன்றைக்கும் நான் பழுதற்றவன் இல்லை, ஆனால் நல்லதுக்காக நான் மாற்றப்பட்டேன்.

மூன்றாவதாக, பரிசுத்த ஆவியானவர் நமக்குக் காண்பிப்பதை நாம் ஏற்றுக்கொண்டோம் என்பதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். "நான் விசுவாசிக்கிறேன், நான் பெற்றுக்கொள்கிறேன்" என்று நாம் சொல்ல வேண்டும். நாம் ஏதோ ஒரு பதிலை அளிக்க வேண்டும். அது தானாக வந்துவிடாது, நமக்குள் ஏதோ ஒன்று நடக்க வேண்டும்.

நான்காவதாக, நாம் இயேசுவை விசுவாசிப்பதை வெளியரங்கமாய் அறிக்கையிட வேண்டும். இதற்குத் தான் இயேசு பேதுருவை வழி நடத்தி வந்தார். இயேசு அதைத்தான்

பேதுருவிடமிருந்து வரவழைத்தார்: "நீர் கிறிஸ்து (மேசியா)" (மத்தேயு 16:16). பேதுரு அதை வெளியரங்கமாக்கினார். இரகசிய விசுவாசிகளைக் குறித்து ஜனங்கள் பேசுவார்கள், இரகசிய விசுவாசிகள் இருக்கிறார்கள் என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன், முக்கியமாக விசுவாசியென்று அறிவித்தால் மரணத்தை சந்திக்கும் தேசங்கள் உண்டு. ஆனால் நிரந்தரமாக ஒருவர் இரகசிய விசுவாசியாக இருக்க முடியாது. ஏனென்றால், இயேசு கூறுகிறார்:

> **மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.**
>
> **மத்தேயு 10:32 – 33**

ஆகையால் இயேசு தனக்கே உரிய தன்மையின்படி, உங்களுக்கு மூன்று தேர்வுகளை அல்லஇரண்டுதான்அளிக்கிறார். நீங்கள்அறிக்கை செய்யலாம் அல்லது மறுதலிக்கலாம். சரியான தருணத்தில் நீங்கள் அறிக்கை செய்ய தவறினால், உண்மையில் நீங்கள் மறுதலிக்கிறீர்கள் என்று அர்த்தமாகும். ஆகையால் நாம் அனைவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் வைத்திருக்கும் விசுவாசத்தை வெளியரங்கமாய் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு வருவது நிச்சயமே. இது அநேகருக்கு மிகவும் முக்கியமான ஒரு நொடி.

நான் விசுவாசியான போது, இராணுவத்தில் நான் கண்டு கொண்ட உண்மை என்னவென்றால், யாரையாகிலும் சந்திக்கும் முதல் நொடியே, உங்கள்

நிலையை தெளிவாக புரிய வைப்பது மிக நல்லது. அப்படிச் செய்தால், பிற்பாடு பின்னிட்டு திரும்பி, “நான் உங்களைச் சந்தித்தபோதே உங்களுக்கு சொல்லவில்லை, ஆனால்.....” என்று தயங்கி தயங்கி உங்கள் நிலையை எடுத்துச் சொல்ல அவசியம் இராது. ஆகையால் ஒவ்வொரு இரவும் நான் எந்த இராணுவ விடுதியில் தங்கியிருந்தாலும், என் படுக்கையின் அருகே, முழங்கால்படியிட்டு ஜெபிப்பேன். அதைப்பார்த்து நான் யார் என்று எல்லோரும் புரிந்து கொண்டார்கள். மிக எளிதாக இருந்தது. தாங்கள் விசுவாசிப்பது என்ன என்பதைத் தெளிவாக எடுத்துரைக்காமல், பின்பு சரியான அறிக்கையை செய்வதற்கு திணரும் மற்ற கிறிஸ்தவர்களை கண்டேன்.

ஆகையால்தான் நான் இதை உங்களுக்கு பரிந்துரைக்கிறேன். நீங்கள் தெரு முனையில் நின்று பிரசங்கிக்க தேவையில்லை, நீங்கள் பிரசங்கியாராக இருக்க தேவையில்லை. நீங்கள் வீட்டில் இருக்கும் பெண்மணியாக இருக்கலாம், மாணவராக இருக்கலாம். நீங்கள் எங்கிருந்தாலும், நீங்கள் இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் என்பதை மாத்திரம் ஜனங்களுக்கு அறிவியுங்கள், அவர் தேவனுடைய குமாரன்.

இந்தச் சந்திப்பின் மிக அடிப்படையான நான்கு தொடர்ச்சியான கட்டங்களை நான் மறுபடியும் நினைவுப்படுத்துகிறேன். ஏனென்றால் நம்முடைய சொந்த வாழ்க்கையில் இப்படிதான் இயேசுகிறிஸ்து என்னும் அஸ்திபாரத்தை நாம் போட முடியும்.

முதலாவது அங்கே ஒரு நேரடி சந்திப்பு இருந்தது.

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியின் மூலம் பிதாவாகிய தேவன் தந்த ஒரு வெளிப்பாடு இருந்தது.

மூன்றாவதாக பேதுரு ஒப்புக் கொள்ளுதலினால் பதிலளித்தார்.

நான்காவதாக அவர் பகிரங்கமாக அறிக்கை செய்தார்.

இன்றைக்கும் சாத்தியமா?

"இப்படிப்பட்ட வெளிப்பாடு இன்றைக்கும் சாத்தியமா?" என்று நீங்களும் கேட்கலாம், ஜனங்களும் கேட்பார்கள். பேதுருவும் மற்ற சீஷர்களும் இயேசுவை உண்மையாகவும், தனிப்பட்ட முறையிலும் அறிந்தது போல, உங்களையும் என்னையும் போன்ற மக்கள் அறிவது சாத்தியமா?

இரண்டு முக்கியமான காரியங்களை நாம் பார்க்க வேண்டும். முதலாவது, இயேசு தச்சனுடைய மகனாக பேதுருவுக்கு வெளிப்படவில்லை. அவரை அப்படியாகவே அநேக காலமாக பேதுரு அறிந்திருந்தான். அவர் நித்தியமான தேவ குமாரனாக பேதுருவுக்கு வெளிப்படுத்தப்பட்டார். எபிரேயர் 13:8இல் வேதம் இப்படியாக சொல்லுகிறது:

> **இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.**

அவரில் எந்த மாற்றமும் இருந்ததுமில்லை, இனி ஒருபோதும் இருப்பதுமில்லை. ஆகையால் இது மொழி, கலாச்சாரம் அல்லது உடைகளுக்கு சம்பந்தம் உள்ள ஒன்றல்ல, ஆனால் இயேசு

யாராயிருக்கிறார் என்ற உண்மையாயிருக்கிறது. அதைத்தான் பேதுரு தன் வாழ்க்கையில் முதல் முறையாக சந்தித்தான். இயேசு யார் என்பதை குறித்த ஒரு உண்மையான வெளிப்பாடு அவனுக்கு ஏற்பட்டது.

இரண்டாவதாக பரிசுத்த ஆவியானவர் மூலமாய் அந்த வெளிப்பாடு கொடுக்கப்பட்டது. வேதம் பரிசுத்த ஆவியானவரை நித்திய ஆவி, காலவரையற்ற ஆவி என்றழைக்கிறது. காலம், நாகரீகம், சரித்திரம், பழக்கவழக்கங்கள், மொழி இவைகளெல்லாம் பரிசுத்த ஆவியானவரை மாற்றுவதில்லை.

ஆகையால், இந்த இரண்டு காரணங்களின் நிமித்தமாக, பேதுரு பெற்ற அதே வெளிப்பாட்டை நீங்களும் நானும் பெறுவது அதிக சாத்தியமான ஒன்று. முதலாவது காரணம், வெளிப்படுத்தப்படுகிறவர் தேவனுடைய குமாரன் என்பது. இரண்டாவது, அவரை வெளிப்படுத்துவது நித்திய ஆவி என்பதாகும்.

அஸ்திபாரத்தின் மேல் கட்டுதல்

அடுத்ததாக மிக முக்கியமான செயல்முறை விஷயத்திற்கு நாம் வருகிறோம், அஸ்திபாரத்தை முடித்துவிட்டால், அதின்மேல் எப்படிக் கட்ட தொடர்வது? ஆரம்பத்தில்நான்சொன்னகட்டிடத்தின் உவமானங்கள் உங்களுக்கு நினைவில் இருக்கும். ஆகையால் அடுத்த மிக முக்கியமான மற்றும் செயல்முறையான விஷயம்: அஸ்திபாரத்தின் மேல் எப்படிக் கட்டுவது?

இதற்கு, எல்லோருக்கும் நன்கு அறிமுகமான இயேசு கூறின உவமைக்குப் போவோம்

– புத்தியுள்ள மற்றும் புத்தியற்றவனின் உவமை. இருவரும் வீடு கட்டினார்கள், ஆனால் வித்தியாசமான விதங்களில் கட்டினார்கள்.

> **ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.**
>
> **மத்தேயு 7:24-27.**

முதலாவது, இரண்டு வீடுகளும் அதே சோதனைக்கு உட்பட்டது என்பதைக் கவனிக்க வேண்டும். சோதனையில்லாத வீடு இல்லை. ஒரு வீட்டின் மேல் மோதின அதே புயல் தான் மற்ற வீட்டின் மேலும் மோதியது. கிறிஸ்தவ வாழ்க்கை புயலற்ற வாழ்க்கையில்லை. நீங்கள் புயல்களை தாண்டுவீர்கள். தாண்டமாட்டீர்கள் என்று தேவன் உறுதியளிக்கவில்லை. உண்மையைச் சொன்னால், “அநேக பாடுகள் உபத்திரவங்கள் வழியாய் தான் நாம் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும்” (அப். 14:22) என்று பவுலும்

பர்னபாவும் ஆதி திருச்சபைக்குச் சொன்னார்கள். உபத்திரவங்கள் இல்லாத ஒரு பாதையில் நீங்கள் இருந்தால், அது தேவனுடைய இராஜ்யத்திற்குத் தான் போகிறாதா என்பது ஒரு கேள்விக்குறிதான்.

பாடுகள் வழியாய் நாம் ஏன் செல்லுகிறோம் என்று எடுத்துச் சொல்வது, இந்த செய்திக்கு உட்பட்டதல்ல. ஆனால், தேவன் அதில் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். இப்பொழுது நீங்கள் அதை கடந்து கொண்டிருந்தால், சோர்ந்து போய் விட்டுவிடாதீர்கள், ஏனென்றால் தேவன் உங்களைக் கடந்து வர செய்வார், முடிவிலே வேறு எந்த விதத்திலும் கற்றுக்கொள்ள முடியாத அநேக காரியங்களை இதன் மூலம் உங்களோடு இடைப்பட்டு கற்றுக்கொடுத்துள்ளார் என்பதை அறிந்து கொள்வீர்கள். என் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து இது எனக்குத் தெரியும்.

புத்தியுள்ளவன் இரண்டு விதங்களில் கட்டுகிறான். இயேசுவின் வார்த்தைகளை, வேதத்தின் வசனங்களைக் கேட்டு, அதின் படி செய்கிறதினால் அஸ்திபாரத்தின் மேல் நாம் எப்படி கட்ட முடியும்? அதே வழியில் தான்: வேதம் என்ன சொல்கிறது என்பதைக் கேட்டு, அதின்படி செய்கிறாதினாலேயே வெறும் கேட்கிறவராக இருக்காதீர்கள், அப்படிப்பட்டவர்களுக்கு வேதத்தில் வாக்குத்தத்தங்கள் இல்லை. கேட்டு அதின்படி செய்யுங்கள். இது செயல்முறையானது. இயேசுவின் போதகத்தையும், வேதத்தின் போதகத்தையும் உங்கள் வாழ்க்கையில் செயல்படுத்துவதுதான். இதிலே தொடரும்போது, தேவன் உங்கள் வாழ்க்கையில் இன்னும் நீங்கள் சத்தியத்தை பயன்படுத்த வேண்டிய பாகங்களை சுட்டிக்காட்டுவார்.

நான் ஐம்பது வருடங்களாக கிறிஸ்தவனாக இருக்கிறேன். ஆனால் தொடர்ந்து அவருடைய வார்த்தையைப் பயன்படுத்த புது விதங்களைத் தேவன் எனக்கு காண்பித்து வருகிறார். நான் அதை அப்பியாசப்படுத்த வேண்டிய வாழ்கையில் புதிய பகுதிகளை காண்பிக்கிறார். என் கட்டிடம் முழுமை பெறவில்லை, தொடர்ந்து கட்டப்பட்டு வருகிறது. ஆனால் அநேக புயல்களை வெற்றிகரமாக தாண்டி வந்திருக்கிறதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஆழமாக தோண்டுங்கள்

இதற்கு ஒப்பான, இயேசுவின் மற்றொரு உவமை இருக்கின்றது ஆனால் அதில் முக்கியமான ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. இயேசு சொல்லுகிறார்:

> **"என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?"**
>
> **லூக்கா 6:46**

அது மிக முக்கியமான ஒரு கேள்வி. இயேசுவை "ஆண்டவர்" என்று அழைத்து, அவருக்கு கீழ்ப்படியாவிட்டால், அது விருதாவான காரியம் ஏனென்றால் "ஆண்டவர்" என்கிற வார்த்தைக்கு, கீழ்ப்படிதலுக்குப் பாத்திரமானவர் என்று அர்த்தமாகும். உங்கள் வாழ்கையை பாதிக்காத ஒரு அறிக்கையை குறித்து எச்சரிக்கையாய் இருங்களென்று இயேசு சொல்லுகிறார். உவமையைத் தொடருகிறார்:

> **"என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு**

ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போட்டு, வீடு கட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின் மேல் மோதியும், அதை அசைக்கக் கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

வசனங்கள் 47 -49

மத்தேயுவில் இல்லாத ஒரு முக்கியமான விவரம் லூக்காவில் சேர்க்கப்பட்டுள்ளது. எத்தனை பேர் அதை கவனித்தீர்களோ தெரியவில்லை. கற்பாறையான அடித்தளத்தை எட்ட விரும்பினவன் ஆழமாய் தோண்ட வேண்டியது அவசியமாய் இருந்தது என்று கூறப்படுகிறது. பாறையான அடித்தளத்தின் மேல் கட்ட ஆரம்பிக்கும் முன், அவன் பல காரியங்களை அகற்ற வேண்டியதிருந்தது.

நம்மில் அநேகருக்கு இது உண்மையாய் இருக்கிறது, எல்லோருக்கும் அல்ல, ஆனால் பெயரளவிலான கிறிஸ்தவ கலாச்சாரத்தில் வளர்ந்த அநேகர், பாறையான அடித்தளத்தை எட்டும்முன், வழியிலிருந்து அநேக காரியங்களை அகற்ற வேண்டியதாய் இருக்கிறது. கிறிஸ்தவமல்லாத கலாச்சாரத்தில் வளர்ந்தவர்களும் அநேக காரியங்களை அகற்ற வேண்டியதிருக்கும். ஆனால் அவைகள்

வித்தியாசமானவைகளாய் இருக்கும். நாம் தோண்டி அகற்ற வேண்டிய ஐந்து காரியங்களை உங்களுக்கு உணர்த்த விரும்புகிறேன்.

பாரம்பரியம்

எல்லா பாரம்பரியங்களும் கெட்டவைகள் அல்ல, சில பாரம்பரியங்கள் நல்லவைகள். எல்லா பாரம்பரியங்களையும் அகற்ற தேவையில்லை, ஆனால், "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்" (மத்தேயு 15:6) என்று இயேசு தம்முடைய நாட்களில் இருந்த மக்களுக்குச் சொன்னார்கள். பாரம்பரியங்களை நம்பி அவைகளின்படி செயல்படுகிறீர்கள், அது தேவனுடைய வார்த்தைக்கு ஒத்ததாக இல்லை. என்னுடைய கருத்தில், இயேசு இதையேதான் இன்றைய யூத மக்களுக்குச் சொல்லுவார், "உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்." ஆனால் யூதர்களை மாத்திரம் பார்க்க வேண்டாம், கிறிஸ்தவ பின்னனியுள்ள அநேகருக்கு இது உண்மையாக இருக்கிறது – நாம் பல பாரம்பரியங்களை பெற்றிருக்கிறோம், செயல்படும் முறைகள், செய்கிற காரியங்கள், பேசும் வார்த்தைகள், இவைகளில் அநேக காரியங்கள் வேதத்திற்கு ஒத்தவைகள் அல்ல. ஆகையால் நாம் ஜாக்கிரதையாக சோதித்துப் பார்க்க வேண்டும்.

பாரபட்சம்

இரண்டாவதாக நாம் அகற்ற வேண்டியது பாரபட்சமான எண்ணங்கள். இதற்கு யாரும்

விதி விலக்கல்ல. பல விதமான பாரபட்சங்கள் இருக்கின்றன. இனம் சம்பந்தமான பாரபட்சங்கள் உண்டு. துரதிஷ்டவசமாக உலகம் இப்படிப்பட்ட இனம் சம்பந்தமான பாரபட்சங்களால் நிறைந்திருக்கிறது. தெற்கு ஆப்பிரிக்காவிலே அற்புதமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது, அங்கே இனப் பாகுபாடு, சில ஜனங்களை சபையில் பங்கேற்பதிலிருந்து கூட விலக்கியது. எவ்வளவு பயங்கரமான எண்ணம்! ஆனால் அது மாத்திரம்தான் இன பாரபட்சமுள்ள இடம் என்று நினைக்காதீர்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இனப் பாரபட்சம் இருந்தது, இன்றைக்கும் அநேக இடங்களில் உள்ளது.

நான் பிரிடிஷ் அல்லது ஆங்கிலேயருடைய பின்னணியிலிருந்து வருகிறேன். ஆங்கிலேயர்களுக்கும் தங்களுடைய பாரபட்சங்கள் உண்டு. அவைகளில் பலவற்றுடன் நான் வளர்ந்தேன். அவைகளை அகற்ற நான் ஆழமாக தோண்ட வேண்டியதாய் இருந்தது. என்னுடைய சொந்த குடும்ப பின்னணி இந்தியாவில் உள்ளது. என்னுடைய மூதாதேயரெல்லாம் இந்தியாவில் இருந்த ஆங்கிலேயருடைய படைகளில் பணியாற்றியவர்கள். பன்னிரெண்டு வயது சிறுவனாக இருக்கும்போது, உணவு உண்ணும்போது ஒரு நாள், சிறு பிள்ளைத்தனமாகநான், "ஒரு இந்தியரைநீங்கள் ஏன் உணவு அருந்த அழைக்க முடியாது என்பது எனக்கு புரியவில்லை" என்று சொன்னேன். என் குடும்பத்தில் இதற்கான எதிர்வினை பயங்கரமாக இருந்தது. நான் நினைத்துப் பார்த்தேன், இதற்கு காரணம் என்ன? பிற்பாடு இது ஒரு பாரபட்சம் என்பதை உணர்ந்தேன்.

என்னை நம்புங்கள், நான் வித்தியாசமான இனப் பின்னணிகளிலிருந்து, வித்தியாசமான பல மக்களைப் பார்க்கிறேன், உங்களில் ஒரு சிலர் தான் இனப் பாரபட்சத்திலிருந்து விடுதலையாய் இருக்கிறீர்கள்.

அடுத்து சபைப் பிரிவுகளின் பாரபட்சங்கள் உண்டு. நம்மில் அநேகர், சில சபைப் பிரிவுகளுக்கு விரோதமான செயல்பாட்டை வெளிப்படுத்துகிறோம். கர்த்தரிடத்தில் இருக்கிற என் முதல் மனைவி லிடியா, டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவள். அவள் அந்த நாட்டின் லூத்தரன் திருச்சபையில் வளர்ந்த பின், அவர்கள் கண்களுக்குப் பயங்கரமாக தோன்றின காரியத்தைச் செய்தாள். அவள் விசுவாசியாக ஞானஸ்நானம் பெற்றாள். இதை அவர்கள் டேனிஷ் பாஷையில் ginderker (கிண்டேற்கேற்) என்றழைப்பார்கள். அப்படியானால், "இரண்டாம் முறையாக ஞானஸ்நானம் பெற்றவள்" என்று அர்த்தம். அவர்கள் டென்மார்க் நாட்டின் பள்ளியில் பணியாற்றியதினாலே, தொடர்ந்து ஆசிரியராக பணியாற்றலாமா என்று தீர்மானிக்க அவளுடைய வழக்கு அந்நாட்டின் பாராளுமன்றம்வரை சென்றது. தன்னுடைய நாட்களின் முடிவு மட்டும் என் மனைவி தொடர்ந்து லூத்தரன் திருச்சபைக்கு விரோதமான பாரபட்சம் கொண்டிருந்தார். அதை நான் நியாயப்படுத்தவில்லை, அது அவளுக்குள் இருந்த பெலவீனமென்றுதான் எண்ணுகிறேன்.

ஆனால் இதை நானே அனுபவித்திருக்கிறேன், ஒரு சில சபைப் பிரிவின் மக்களைக் குறித்து நான் கேள்விப்படும் போது, அவர்களை சந்திக்காமலேயே, அவர்களுக்கு விரோதமான மனநிலையை

ஏற்படுத்திக்கொள்வேன். "அவர்கள் அப்படி இருப்பார்கள், இதில்தான் அவர்கள் தவறு செய்வார்கள்," என்றெல்லாம் எண்ணுவேன். அனுபவம் எனக்குக் கற்றுக்கொடுத்த பாடம் என்னவென்றால், கூடுமானால் ஒரு நபரை சந்திக்கும் வரையிலும், அவர்களைக் குறித்து தீர்ப்பு செய்யாதிருங்கள். "தவறான" சபைப் பிரிவிலிருந்து, சில மிக நல்ல, "சரியான" மக்களை நான் சந்தித்திருக்கிறேன். "நல்ல" சபைப் பிரிவிலிருந்து வந்தவர்கள் தவறானவர்களாக இருப்பதையும் கண்டேன். ஆகையால் தயவு செய்து, சபைப் பிரிவு பாரபட்சத்திற்கு இடம் கொடாதிருங்கள்.

அடுத்து சமுதாய பாரபட்சங்கள் உண்டு. மறுபடியும், நான் அப்படிப்பட்ட பாரபட்சத்தில் வளர்க்கப்பட்டவரின் உதாரணமாக இருக்கிறேன். எனக்கு அந்தப் பாரபட்சம் இருக்கிறதென்று அறியாமல் இருந்தேன். உலகின் பிற பகுதிகளில் மக்கள் எப்படி வாழ்ந்தனர் என்று எனக்குத் தெரியவில்லை. பிரிட்டனில் Eton மற்றும் Cambridge பல்கலைக்கழகத்தில் படித்தேன். அதற்குப்பின் பிரிடிஷ் இராணுவத்தில் சேர்ந்து அங்கு நான் முன் சந்தித்திராத பல்வேறு தரப்பு மக்களோடு இருந்தேன். அப்போதுதான் என்னுடைய சொந்த பிரிடிஷ் மக்களை குறித்து எவ்வளவு குறுகிய அறிவு எனக்கிருந்தது என்று உணர்ந்தேன். இராணுவத்தில் நான் செலவளித்த ஐந்தரை ஆண்டுகள் அனுபவத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். என்னிலிருந்து அநேக சமுதாய பாரபட்சங்களை அகற்றப்பட்டன. இராணுவ அதிகாரிகளின் குடும்பத்தில்பிறந்தநான், அந்தத்தளத்திலே இருக்க பழகிவிட்டேன், ஆனால் அந்தத் தளத்தில் இல்லாத

போது நான் பலவற்றை கற்றுக்கொண்டேன். மக்களை ஒரே தளத்திலிருந்து பார்க்கும்போது, அவர்கள் ஒரு விதமாக தோன்றுவார்கள். ஆனால் அவர்களைக் கீழே இருந்து பார்க்கும்போது, அவர்கள் வித்தியாசமாக தோன்றுவார்கள். அப்பொழுதிலிருந்து நான் எப்போதும், “கீழிருந்து என்னைப் பார்க்கும் மக்களுக்கு நான் எப்படி தோன்றுகிறேன் தேவனே?” என்று கேட்பதுண்டு.

தனிப்பட்ட பாரபட்சமும் உண்டு. சிலருக்கு சத்தமாக பேசுவோரைப் பிடிக்காது. சிலருக்கு சிவப்பு நிற தலைமுடியை உடையவர்களைப் பிடிக்காது. நாம் எல்லோருக்கும் பலவித மடத்தனமான தனிப்பட்ட பாரபட்சங்கள் உண்டு. ஆப்பிளை கடித்து அசைபோட்டு சாப்பிடுவோருக்கு விரோதமான பாரபட்சம் எனக்கு உண்டு. நான் அதை மேற்கொள்ள அதிக முயற்சி செய்கிறேன். ஆனால் அது இன்னும் பின்னணியில் இருக்கின்றது. ஏனென்றால் எனக்கு அந்த சத்தம் பிடிக்காது.

முன் முடிவு செய்தல்

அகற்றப்பட வேண்டிய மூன்றாவது தடை, முன் முடிவு செய்தல். உதாரணத்திற்கு, இயேசு யார் என்பதைக் குறித்த முற்றிலும் தவறான கருத்தைக் கொண்ட மக்கள். அமைதியான, மென்மையான, சாந்தமான இயேசு கிறிஸ்து, கிறிஸ்துமஸ் விருந்துக்கு வருபவர். அதுவல்ல உண்மையான இயேசு. அவர் மிகவும் வித்தியாசமான நபராகவே இருந்தார், அதிர்ச்சியூட்டுகிறவராக, நம்முடைய பட்சபாதங்களையும், தவறான முன் முடிவுகளையும் அகற்றுகிறவராகவே இருந்தார்.

இன்னும் பல விதங்களில் நாம் முன் முடிவு செய்யலாம். கிறிஸ்தவனாய் இருப்பது எப்படி என்பதைக் குறித்து முன் முடிவு செய்தல். என்னுடைய பின்னனியை உங்களுக்குச் சொன்னேன், அப்படிப்பட்ட பின்னனியில் வளர்ந்த நான், "ஒரு கிறிஸ்தவனானால் என் வாழ்கையின் மீதியான காலம் முழுவதும் துன்பம் தான்" என்று நினைத்துக் கொண்டேன். பேட் பூண்-ஐ (Pat Boone) போல, "பரலோகம், உலகத்தில் 70 ஆண்டுகள் துன்பம் சகித்து பெற்றுக்கொள்ளப்பட தகுதியல்ல" என்று நினைத்து, கிறிஸ்தவனாகும் எண்ணத்தையே, இயேசுவைச் சந்திக்கும் வரை அகற்றி வைத்திருந்தேன்.

அவிசுவாசம்

மிகவும் ஆபத்தான நான்காவது தடை - அவிசுவாசம். சில நேரங்களில் நான் போதிக்க ஆரம்பிக்கும் முன்னே, ஜனங்கள் எல்லாரையும் கூட்டி, அவர்களோடு நானும் சேர்ந்து, அவிசுவாசத்தை அறிக்கையினால் அப்புறப்படுத்துவோம். பல இடங்களில் நம்மில் அநேகர் இன்னும் அவிசுவாசத்தினால் சூழப்பட்டிருக்கிறோம். உண்மையிலேயே நம்முடைய மனது இன்னும் விசுவாசத்துக்கு திறக்கப்படவில்லை.

கலகம்

கடைசியாக, மிக முக்கியமானது என்று நான் கருதுவது - கலகம். "நான் ஒரு கலகக்காரன் அல்ல" என்று நீங்கள் சொல்லலாம். நீங்கள் கலகக்காரர்தான்! இன்னும் அதை

நீங்கள் கண்டுபிடிக்கவில்லை என்றாலும், நீங்கள் தொடர்ந்து கலகக்காரராகதான் இருப்பீர்கள். ஆதாமின் வம்சத்தில் தோன்றின ஒவ்வொருவரும் உள்ளே ஒரு கலகக்காரனை உடையவனாய் பிறக்கிறான். நாம் அந்த கலகக்காரனை அடையாளம் கண்டு கொண்டு, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த கலகக்காரானுக்கு தேவன் ஒரே ஒரு பரிகாரம்தான் வைத்திருக்கிறார் – தூக்கிலிடுவது தான். அவர் அவனை சபைக்கு அனுப்புவதில்லை, அவனுக்குப் பொன்னான விதிமுறையை கற்றுத் தருவதில்லை, வேத வசனத்தை மனப்பாடம் செய்ய வைப்பதுமில்லை. தேவன் அவனை மரணத்துக்கு உட்படுத்துகிறார். ஆனால் தேவ கிருபை என்னவென்றால், அந்த மரண தண்டனை, 2000ம் ஆண்டுகள் முன், கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது நிறைவேற்றபட்டது. "நம்முடைய பழைய மனுஷன் அவரோடு அறையப்பட்டான்" (ரோமர் 6:6). நமக்குள் இருக்கும் அந்த கலகக்காரனை அடையாளம் கண்டு கொண்டு, மனப்பூர்வமாய் அவனை மரண தண்டனைக்கு ஒப்புக்கொடுக்கும் நிலைக்கு வர வேண்டும்.

தேவனுடைய வார்த்தை

இப்பொழுது நான் தேவனுடைய வார்த்தைக்கு வருகிறேன். ஏனென்றால் கிறிஸ்தவ வாழ்க்கையில் இது மிகமிக முக்கியமானது. வேதத்தைக் குறித்து உங்கள் மனநிலை என்ன? இயேசுவை போலவே உங்கள் மனநிலையும் உள்ளதா? யோவானின் சுவிசேஷத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். இயேசு சொன்னார்:

“தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களைத் தேவர்கள் என்று அவர் [அதாவது தேவன்] சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க...”

யோவான் 10:35

வேதாகமத்திற்கான இரண்டு முக்கியமான தலைப்புகளை இயேசு இங்கே பயன்படுத்துவதினால் அது அதிக முக்கியத்துவம் வாய்ந்த வசனமாகும். “தேவனுடைய வசனம்” மற்றும் “வேதவாக்கியம்.” தேவவசனம் என்று வேதாகமத்தை அழைக்கும் போது, அது தேவனிடத்திலிருந்து வந்தது என்று அர்த்தமாகும், எந்த மனுஷனிடத்திலிருந்தும் தோன்றவில்லை. மனுஷ வாய்க்கால்கள் மூலமாய் வந்திருந்தாலும், தேவனிடத்திலிருந்து வரும் வார்த்தையாக இருக்கிறது.

“வேதவாக்கியம்” என்ற சொற்றொடர் கட்டுப்பாடுகள் உள்ள சொற்றொடராக இருக்கிறது. எழுத்தில் பதிவான ஒன்று என்று அர்த்தமாகும். எழுத்தில் பதிவாகாத அநேக காரியங்களை தேவன் சொல்லியிருக்கிறார். ஆனால் தேவனுடைய தீர்மானத்தின் படி எவைகள் எழுத்தில் பதிய வேண்டுமென்று தேவன் கண்டாரோ, அவைகள்தான் வேதாகமத்தில் உள்ளன. அதுதான் வேதவாக்கியம். அதற்கு அர்த்தம் எழுதப்பட்டது என்பதாகும்.

அதைக் குறித்து இயேசு ஒரே, எளிய, பரந்த வாக்கியத்தைச் சொன்னார். “வேதவாக்கியம் தவறாதது.” நீங்கள் வேதத்தின் அதிகாரத்தை குறித்து எவ்வளவு வேண்டுமானாலும் விவாதிக்கலாம். ஆனால் இயேசு எல்லாவற்றையும் ஒரே வார்த்தையில்

சொல்லி முடித்தார். வேதவாக்கியம் தவறாதது. அது முழுமையான அதிகாரத்தை உடையது. அதில் உள்ள யாவும் முற்றிலும் நிறைவேறும். நீங்கள் அதற்கு விரோதமான நிலையை எடுத்துக்கொள்ளலாம், அதை நிராகரிக்கலாம். ஆனால் அதைத் தகர்க்க முடியாது. உண்மையைச் சொன்னால் நீங்கள் அதை நிராகரித்தால், முடிவில் அது உங்களைத் தகர்க்கும். வேதவாக்கியம் தவறாதது.

“உயர்வான விமர்சனம்” என்று சொல்லப்படுகிற ஒருவித படிப்பினை உண்டு, அது வேதத்தை எல்லா விதமான கேலியான விமர்சனங்களுக்கு உட்படுத்தி, அதை முற்றிலும் பலனில்லாத புத்தகமாக மாற்றிவிடுகிறது. வேதத்தின் அதிகாரத்திலும், பிழையற்ற தன்மையிலும் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தை பலவீனப்படுத்துவதே, பிசாசு உங்கள் வாழ்க்கையிலும் என்னுடைய வாழ்க்கையிலும் செய்ய விரும்பும் ஒரே காரியமாகும். ஆனால இயேசுவை போல் நாமும் இருந்தால், நாம் வேதவாக்கியங்கள் தவறாது என்று சொல்லிவிடுவோம்.

இயேசுவே தேவனுடைய வார்த்தை

வேதம் மட்டும் தேவனுடைய வார்த்தை அல்ல, இயேசு தாமே தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறார். இது யோவானின் சுவிசேஷத்தில் இரண்டு இடங்களில் வெளிவருகிறது:

> **ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.**
>
> **யோவான் 1:1**

அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நம்மக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

யோவான் 1:14

அது இயேசுவைக் குறிக்கின்றது. அவர் வார்த்தையாய் இருந்தார், வார்த்தையாய் இருக்கிறார். இயேசு பிறந்தபோது, வார்த்தை மாம்சமானது. ஆனால் அவர் எப்போதுமே வார்த்தையாகவே இருந்தார். நித்திய காலமாய் அவர் தேவனோடு இருந்த வார்த்தையாக இருந்தார்.

அவர் மறுபடியும் வரும்போது, எப்படித் திரும்ப வருகிறார்? அவருடைய நாமம் என்னவாயிருக்கும் தெரியுமா? இது இயேசு மகிமையில், பரலோகத்தை விட்டு, பூலோகத்தில் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்க வரும் காட்சி.

பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார். அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.

வெளிப்படுத்தல் 19:11—13.

இது ஆச்சரிய விதமாக இருக்கிறது, அவர் முதல் வந்தபோது, வார்த்தையாக இருந்தார், அவர் மறுபடியும் வரும்போது அவரே வார்த்தையாய் இருப்பார். ஆகையால் அவர் எப்போதுமே வார்த்தையாய் இருந்தார், இன்னும் வார்த்தையாய் இருக்கிறார், இனியும் வார்த்தையாய் இருப்பார்.

மிக முக்கியமான ஒன்றை இது வெளிகொண்டுவருகிறது. வேதத்திற்கும், இயேசுவுக்கும் முழுமையான ஒற்றுமை இருக்கின்றது. ஒன்றைக் குறித்து உங்களுக்கிருக்கும் மனநிலைதான் மற்றொன்றைக் குறித்தும் இருக்கும். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, வேதத்தை விசுவாசிக்காமல் இருக்க முடியாது. அந்த உண்மையை கிரகித்தீர்களா? இயேசு தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறார் – அவர் மாம்சமான வார்த்தை. வேதம், எழுத்தில் இருக்கும் வார்த்தை. இவ்விரண்டிற்கும் முழு ஒற்றுமையுள்ளது.

ஐந்து முக்கியமான உண்மைகள்

தேவனுடைய வார்த்தையைக் குறித்து, யோவானின் சுவிசேஷத்தில் உள்ள, ஐந்து முக்கியமான உண்மைகளை எடுத்துக்கொண்டு, அதனோடு உங்களுக்கு இருக்கும் தொடர்பை நான் காண்பிக்க விரும்புகிறேன். மூன்றே வசனங்கள், அதில் இயேசு தன் சீஷர்களிடம் விடைப்பெற்று, அவர் போக போகிறாரென்றும், அவர்கள் சில காலம் தனித்து விடப்படுவார்கள் என்பதையும் குறித்து அவர்களை எச்சரிக்கிறார். சீஷர்களுக்கு அது மிகவும் குழப்பமும், பயமும்

நிறைந்த நேரமாக இருக்கின்றது, இந்த வெளிப்பாட்டினால் அவர்கள் ஸ்தம்பித்து நிற்கிறார்கள். ஆனால் அதின் நடுவில், இயேசு விசுவாசிகளாகிய நமக்கு வேதம் என்னவாயிருக்க வேண்டும் என்பதைக் குறித்து, ஒரு ஆச்சரியமான வெளிபாட்டைக் கொடுக்கின்றார். அவர் சொல்லுகிறார்:

> **இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்கள் பிழைப்பீர்கள்.**
>
> **யோவான் 14:19**

அங்கே இயேசு உலகத்துக்கும் – அதாவது இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும் – அவருடைய சீஷர்களுக்கும் வித்தியாசத்தைக் காண்பிக்கிறார். அவர் சொன்னார், உலகம் என்னைக் காணாது. ஆனால் சீஷர்கள் என்னைக் காண்பார்கள்.

அப்பொழுது யூதாஸ், அவரிடம் மிகவும் முக்கியமான கேள்வியைக் கேட்டார்:

> **ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான்.**
>
> **வசனம் 22**

இயேசு அளித்த பதில் மிக முக்கியமான சத்தியம் நிறைந்தது:

> **இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக, "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக்கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில்**

வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.”.

வசனம் 23

இயேசுவின் பதிலில் இருந்து, ஐந்து மிக முக்கியமான கருத்துக்களை நான் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாவதாக, இயேசு தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தாமல், தம் சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்துவதாகக் கூறினார். சீஷர்களை உலகத்திலிருந்து வேறுப்பிரிக்கிற அடையாளம் என்ன? தேவனுடைய வார்த்தையை கைக்கொள்வது தான். உண்மயான சீஷர்கள் இயேசுவின் வார்த்தையை கைக்கொள்ளுவார்கள். அவர்கள் சபைப் பிரிவின் முத்திரைகளால் வேறுப்பிரிக்கப்பட்டவர்கள் அல்ல, அவர்கள் வேதத்தோடு வைத்திருக்கும் தொடர்புதான் அவர்களை வேறுப்பிரிக்கின்றது. அது தான் உங்களை உண்மையான சீஷனாக மாற்றுகிறது அல்லது உண்மையான சீஷனாய் இல்லாதபடி தடை செய்கிறது. தேவனுடைய வார்த்தையோடு நீங்கள் வைத்திருக்கும் தொடர்பு தேவனுடைய வார்த்தையை கைக்கொள்வது சீஷனை உலகத்திலிருந்து வேறு பிரிக்கின்றது.

நாம் ஒவ்வொருவரும் இந்த இரண்டில் ஏதாவது ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். நாம் சீஷர்களாய் இருந்தால் வேதத்தை கைக்கொள்ளுகிறோம். வேதத்தை நாம் கைக்கொள்ளாவிடில், உலகத்திற்குரியவர்களாய் இருக்கிறோம் – இயேசுவின் கர்த்தத்துவத்துக்கு அடிப்பணியாத உலகம் அது.

இரண்டாவது சத்தியம் இதுதான்: இயேசு சொன்னார், “ஒருவன் என்னில்

அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்." ஆகையால் தேவனுடைய வார்த்தையை கைக்கொள்வது, தேவன் பேரில் சீஷன் வைத்திருக்கும் அன்பிற்கு, உச்சகட்டமான பரீட்சை. அன்பு, கீழ்ப்படிதலை ஊக்குவிக்கும்.

மிக முக்கியமாக நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், விசுவாசிகளாகிய நாம், பயத்தினாலே தூண்டப்படாமல், அன்பினாலே ஊக்குவிக்கப்படுகிறோம். ஒரு விதத்தில் நியாயப்பிரமாணம், பயத்தின் தூண்டுதலை பயன்படுத்தியது. "இதைச் செய்தால் நீங்கள் தண்டனையைப் பெறுவீர்கள்." ஆனால் அது கிரியை செய்வதில்லை. நான் அநேகப் பிள்ளைகளை வளர்க்க உதவி செய்துள்ளேன். நான் கண்டுபிடித்தது என்னவென்றால், அவர்கள் பெற்றோராகிய உங்கள் அதிகாரத்திற்குக் கீழ்இருக்கும் போது, நீங்கள் பயமுறுத்துதலை பயன்படுத்தலாம். ஆனால் உங்களை விட்டுப்போன பின்பு, பயத்தினால் ஊக்குவிக்கப்பட்டிருந்தால், அவர்கள் மாறிவிடுவார்கள். அவர்களை உண்மையாக வைக்கும் ஒரே ஊக்கம் அன்பு தான். இயேசுவும், தேவனும் ஞானமுள்ளவர்களாய், பயத்தின்மேலே கட்டாமல், அன்பின் மேலே கட்டியிருக்கிறார்கள். ஆகையால் தேவனுடைய வார்த்தையைக் கடைப்பிடிப்பது, சீஷன் தேவன்மேல் வைத்திருக்கும் அன்பிற்கான உச்சகட்டமான பரிட்சையாகும். அன்பு கீழ்ப்படிதலுக்கான ஊக்கமாகும்.

அதற்குப்பின் இயேசு சொல்லுகிறார், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்..." இது இன்னும்

ஓர் அதிசயமான உண்மை. தேவனுடைய வார்த்தையைக் கைக்கொள்வது, பிதாவாகிய தேவன், நம்மை விசேஷித்த அன்பினாலே நேசிக்கக் காரணமாய் இருக்கிறது. தேவன் முழு உலகத்தையும் ஒரு விதமாக நேசித்தார், ஆனால் அவருடைய வார்த்தையை கைக்கொண்டு நடக்கும், கிறிஸ்துவின் சீஷர்களுக்கு, ஒரு வித்தியாசமான அளவிலான அன்பைத் தேவன் வைத்திருக்கிறார்.

"உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல், எங்களுக்கு உம்மை வெளிப்படுத்துவதெப்படி?" என்று யூதாஸ் கேட்டக் கேள்வியைப் பார்த்தோம். இயேசுவின் பதில், "ஒருவன் என்னை நேசித்தால் என் வார்த்தைகளைக் கைக்கொள்ளுவான்." அப்படியானால், கிறிஸ்து தம்மை நமக்கு எப்படி வெளிப்படுத்துகிறார்? வார்த்தையினாலே. வார்த்தையைக் கைக்கொள்வதினாலே, நாம் இயேசுவை இன்னும் நன்றாக அறிந்துக்கொள்ளுகிறோம். நமக்கு ஒரு அதிசயமான ஆவிக்குரிய அனுபவம் உண்டாயிருக்கலாம், மூன்றாம் வானத்துக்கு எடுத்துக்கொள்ளபடலாம், வேறு எந்த அனுபவமும் பெறலாம். ஆனால் அது எல்லாருக்கும் நடப்பதில்லை, தேவன் அதை அடிப்படையாக வைத்து தம்மை வெளிப்படுத்துவதில்லை, இயேசுவும் தம்மை அப்படியாக வெளிப்படுத்துவதில்லை. தேவனுடைய வார்த்தையைக் கைக்கொள்வதினால் மாத்திரம் அது நடக்கும்.

கடைசியாக, இந்த ஆச்சரியமான அறிக்கை: "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான், அவனில் என்

பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்துஅவனோடேவாசம்பண்ணுவோம்.” வேதத்தில் ஒரு சில இடங்களில் மாத்திரம்தான் தேவனைக் குறித்து பேசும்போது பன்மை பயன்படுத்தப்படுகிறது, ஆனால் அவைகளில் இது ஒன்றாகும். இயேசு “நாங்கள்”, என் பிதாவும், நானும் வந்து அவனோடு வாசஸ்தலத்தை உருவாக்குவோம், என்று சொல்லுகிறார். தேவனாகிய பிதாவும், தேவனாகிய குமாரனும், வந்து தங்கள் வாசஸ்தலத்தை நம்மோடு உருவாக்க விரும்புவது, ஒரு வியப்பூட்டும் அறிக்கை மற்றும் அதிசயமான வெளிப்பாடாகும். நம்மை தங்கள் சொந்த வாசஸ்தலமாக்க விரும்புகிறார்கள். ஆனால் இது எப்படி ஆகும்? வார்த்தையினாலே. நாம் வார்த்தையை நேசிக்காதவர்களாக, வார்த்தைக்கு கீழ்படியாதவர்களாக இருந்தால், தேவன் நம்மை தம்முடைய வாசஸ்தலமாக மாற்றமாட்டார்.

நான் முடிவுக்கு வரும்போது, ஒரு ஆழமான கருத்தை உங்களுக்கு சொல்லுகிறேன். நீங்கள் தேவனுடைய வார்த்தையை நேசிப்பதைக் காட்டிலும், தேவனை அதிகமாக நேசிக்க முடியாது. ஆகையால் தேவனை எவ்வளவு நேசிக்கிறீர்கள், தேவனுக்கு உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு இடம் உண்டு என்பதை அறிய விரும்பினால், நீங்கள் அறிந்துக்கொள்ளலாம். அதைக் குறித்து நீங்கள் ஊகஞ்செய்ய தேவையில்லை. நீங்கள் உங்களையே பார்த்துக் கேளுங்கள், “நான் வேதத்தை எவ்வளவு நேசிக்கிறேன், வேதத்திற்கு என் வாழ்வில் எவ்வளவு இடம் இருக்கின்றது?” ஏனென்றால் அவ்வளவுதான் நான் தேவனை நேசிக்கிறேன், தேவனுக்கு என் வாழ்வில் இடம் கொடுக்கின்றேன்.

வேதத்தை குறித்ததான அந்த ஐந்து வாக்கியங்களையும் நான் மறுபடியும் சுருக்கமாக சொல்லட்டும், ஏனென்றால் அவை மிக முக்கியமானது. இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் மங்கலான வெளிச்சத்தின் பகுதியில்வாழ்கிறார்கள், அவர்களுக்கு வெளிச்சம் என்றால் என்ன, இருள் என்றால் என்ன என்று தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஆசைப்படுகிறார்கள், நம்புகிறார்கள். ஆனால் நிச்சயமாய் இன்னும் அறியாமல் இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கு அதற்குரிய இடத்தை இன்னும் கொடுக்காமல் இருக்கிறார்கள்.

1. தேவனுடைய வார்த்தையைக் கடைப்பிடித்தல் உலகத்திலிருந்து உண்மையான சீஷர்களை வேறுப்பிரிக்கிறது.

2. தேவனுடைய வார்த்தையைக் கடைப்பிடித்தல் தேவன் மேல் சீஷன் வைத்திருக்கும் அன்பிற்கு உச்சகட்டமான சோதனை. கீழ்ப்படிதலுக்கு ஊக்கம் அளிப்பது அன்பு, பயம் அல்ல.

3. தேவனுடைய வார்த்தையைக் கடைப்பிடித்தல் தேவன் சீஷனை நேசிப்பதற்கு பிரதானமான காரணமாய் இருக்கிறது. தேவன் சீஷர்களை விசேஷமாய் நேசிக்கிறார். முழு உலகத்தையும் நேசிக்கிறார், ஆனால் சீஷனுக்கு விசேஷித்த அன்பு வைத்திருக்கிறார். ஆனால் அவர் சீஷர்களாக நேசிப்பவர்கள், அவருடைய வார்த்தையைக் கடைப்பிடிப்பவர்கள். நீங்கள் தேவனுக்கு விசேஷமாக இருக்க வேண்டுமானால் அவருடைய வார்த்தையைக் கைக்கொள்ள வேண்டும்.

4. தேவனுடைய வார்த்தையைக் கடைப்பிடித்து கீழ்ப்படிவதின் மூலம் கிறிஸ்து நமக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். கேள்வி இதுதான்: "உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல், எங்களுக்கு உம்மை எப்படி வெளிப்படுத்துவீர்?" இயேசு, "என்னை நேசித்தால், என் வார்த்தைகளைக் கைக்கொள்வீர்கள். அப்படிதான் என்னை வெளிப்படுத்துவேன்" என்று சொன்னார்.

5. கடைசியாக, தேவனுடைய வார்த்தையின் மூலம் பிதாவும் குமாரனும் இணைந்து நமக்குள் வாசம் செய்ய வருவார்கள். அது ஆச்சரியமான ஒரு காரியமல்லவா? என்னை வியக்க வைக்கின்றது. தேவனாகிய பிதாவும், தேவனாகிய குமாரனும், தங்கள் வாசஸ்தலத்தை நமக்குள் உருவாக்க விரும்புகிறார்கள், ஆனால் தேவனுடைய வார்த்தையை நாம் கடைப்பிடிக்கும் போதுதான் அப்படி செய்வார்கள்.

"பரலோக பிதாவே, உம்முடைய வார்த்தையாகிய, தேவனுடைய வார்த்தை என்னும் வேதத்திற்காக நாங்கள் நன்றி சொல்லுகிறோம். இந்த நிச்சயமான, அதிகாரமுள்ள, ஒழிந்துபோகாத வார்த்தை, எங்கள் கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது. இந்தச் செய்தி யார் யாரை சென்றடையுமோ, அவர்களுக்காக நான் ஜெபிக்கிறேன் ஆண்டவரே, அவர்கள் உம்முடைய வார்த்தையை நேசிக்கிறவர்களாக இருக்கட்டும். உம்முடைய கிருபையினாலே, நாங்கள் வேதத்திற்கு எங்கள்

வாழ்க்கையில், அதற்குரிய இடத்தைக் கொடுத்து, ஆண்டவராகிய இயேசுவின் உண்மையான சீஷர்களாக இருக்க உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில், ஆமேன்."

எழுத்தாளரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915–2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் பெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரேய பல்கலைக்கழகத்தில் எபிரேய மற்றும் அராமிய மொழிகள் உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றியபோது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்தச் சந்திப்பில் இருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார்; இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும், கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபைப்பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது போதனையை அனைத்து இன மற்றும்

மத பின்னணியிலிருந்தும் மக்களுக்குச் சமமாக பொருத்தமானதாகவும், பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80 க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார். அவற்றில் பல, 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷியன், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது. ‘இயேசு திரும்பும் வரை’ தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்ப்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது. இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப் பற்றிய தற்போதைய தகவலுக்கு,

இங்கு செல்க: www.derekprince.com

**உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப,
புத்தகங்கள் வாங்க மற்றும் மேலும்
விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி:**

For orders, prayer requests & other enquiries
please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

**உங்கள் காணிக்கைகளையும்,
நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு
அனுப்பி வைக்கவும்.**

You can also send your offerings and
contributions towards this ministry to the
above address.

Visit our WEBSITE:

www.derekprince.com/ta